# கர்த்தர் உன்னை உயர்த்துவார். சங்கீ 37 : 34

தேவனுடைய பிள்ளையே,

இந்த ஆண்டிலே கர்த்தர் உன்னை உயர்த்துவார் என்று விசுவாசிக்கிறாயா ? இந்த ஆண்டிலே கர்த்தர் என்னை உயர்த்துவார். நான் இருக்கும் இடத்திலே உயர்வு, நான் செய்யும் வியாபாரத்தில் உயர்வு, குடும்பத்திலே உயர்வு, ஆவிக்குரிய வாழ்க்கையிலும் உயர்ந்து கொண்டே செல்ல வேண்டும் என்று விசுவாசி.

நிச்சயமாக "**கர்த்தர் உன்னை உயர்த்துவார்.**"

உயர்வின் இரகசியம் என்ன தெரியுமா ? உன்னை எல்லா இடங்களிலும், சூழ்நிலைகளிலும், பேச்சிலும் நடக்கையிலும் உன்னைத் தாழ்த்துவது.

**வேதம் கூறுகிறது, சங்கீதம் 138 : 6**

**கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்.** உன்னை, நோக்கி பார்க்க வேண்டுமானால், உன் இருதயத்தில் மனத் தாழ்மை வேண்டும்.

தேவனுடைய பிள்ளையே,

நம் ஆண்டவராகிய இயேசுவின் உயர்வுக்கு காரணம் தாழ்மை தான். **பிலி. 2 : 9.**

அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார் என்று பார்க்கிறோம்.

ஆம் தேவனுடைய பிள்ளைகளே,

இந்த வருடத்தின் ஆரம்பத்திலிருந்தே எல்லாவற்றிலும் நம்மை தாழ்த்துவோம். உன்னை சிறுபிள்ளையைப் போல தாழ்த்து என்று வேதம் கூறுகிறது,

**மத்தே. 18 : 4 ல் கூறுகிறது** : சிறு பிள்ளையைப் போல தாழ்த்துகிறவன் எவனோ அவன் பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான். அப்படியானால் நிச்சயமாக இந்த உலகத்தில் உயர்த்தப்படுவாய்.

எத்தனையோ ஆண்டுகளாக வேலைபார்த்தும் உயர்வில்லையே, என்னைவிட பிந்தி வந்தவர்களெல்லாம் உயர்ந்து விட்டார்களே என்று அங்கலாய்க்கிறாயா ? இந்த ஆண்டு நீ இருக்கும் இடத்தில் உயர்வு உண்டு.

ஆனால் நீ **சங். 37 : 34** : கர்த்தருக்கு காத்திருந்து அவருடைய வழியைக் கைக்கொள். அப்பொழுது நீ பூமியை சுதந்தரித்துக் கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்.

**1 பேதுரு 5 : 6 ல்** : ஏற்றக்காலத்திலே தேவன் உன்னை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள்அடங்கியிருங்கள்" என்று வேதம் கூறுகிறது.

அன்பார்ந்த சகோதரனே,

நீ பொறுமையோடும், தாழ்மையோடும் உயர்வை காணக் காத்திருப்பாயா ?

**இயேசு சொன்னார்**: தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றும் தன்னைத் தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்றும் கூறுகிறார்.

எல்லாச் சூழ்நிலைகளிலும் தாழ்த்துவது கடினம் தான். அதிலும் சிலருக்கு தங்களை மற்றவர் உயர்த்த வேண்டும் என்றும் தன்னைத்தானே உயர்த்தி பேசி பேசியே காலத்தை கடத்திவிடுவார்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எப்படி ? என்று சிந்தியுங்கள். வாழ்க்கையில் நீ உயர்த்தப்பட '**இரகசியம்**' தாழ்த்துவது என்று மறந்து போகாதே.

**லூக்கா. 1 : 48,52**

அவர் அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

கடைசியாக சகோதரரே!

உங்கள் வாழ்வில் தாழ்மை இருக்குமானால் பலவான்களையே ஆசனங்களிலிருந்துத் தள்ளிவிட்டு உங்களை உயர்த்துவார். ஆமென்.

உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்.

**கர்த்தர் என்னை உயர்த்துவார்.**

**கர்த்தர் என்னை உயர்த்துவார்.**

மீண்டும், மீண்டும் விசுவாச அறிக்கை செய்யுங்கள்.

**கர்த்தர் உன்னை உயர்த்துவார்.**